**மனிதாபிமான புனர்வாழ்வு செயற்பாடுகளுக்கான தேசிய சங்கம்.**
**National Association for Humanitarian Rehabilitation Operations**
**NAHRO**
KR/DS/SS/NGO/2012/06, NO-203, Kandy Road, Kilinochchi. E-Mail :- nahrongo@gmail.com, Phone .NO- 0212283659

2017.11.10

திரு.ம.சாந்தமூர்த்தி,

லோட்டஸ்

அன்புடையீர்,

**தையல் பயிற்சி நிலைய அறிக்கை.**

பிரமந்தனாறு கிராமத்தில் நடைபெற்றுவரும் தையல் பயிற்சி நிலையத்தில் கடந்த 18.09.2017ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்ட தையல் பயிற்சி மாணவர்களின் வசதி கருதி கிழமையில் 05.நாட்களும் காலை 9.00 மணி தொடக்கம் மாலை 4.30 மணி வரையில் நடைபெற்று வருகின்றது. மாணவர்கள் அனைவரும் மிகுந்த ஆர்வத்தோடு இப்பயிற்சினை மேற்கொண்டு வருகின்றனர்.

பயிற்சியாளர்களினால் தற்போது தைக்கப்பட்ட ஆடைகள் மற்றும் புகைப்படங்கள், கணக்கறிக்கை என்பன இணைக்கப்பட்டுள்ளது.

கடந்த 09.11.2017ஆம் திகதி விசேட கலந்துரையாடல் ஒன்று பயிற்சியாளர்களுக்கு நடாத்தப்பட்டது. இக்கலந்துரையாடலில் பின்வரும் விடயங்கள் கலந்துரையாடப்பட்டது.

1. மாணவர்களின் வரவு மிகவும் முக்கியமானதாகும் குறித்த பாட அட்டவணை நேரத்திற்கு அமைவாக பயிற்சியினை சிறப்பாக நடைமுறைப்படுத்த வேண்டும்.
2. பயிற்சிக்கு பெயர் விபரம் தந்து பயிற்சியில் கலந்துகொண்டவர்கள் இடையில் விலக முடியாது அப்படி விலகுவார்களாயின் அவர்கள் பயிற்சியில் கலந்து கொண்ட நாட்களுக்குரிய செலவீனங்கள், மற்றும் அவர்களுக்கு வழங்கப்பட்ட தையல் உபகரணங்களை முறைப்படி தையல் ஆசிரியரிடம் சமர்ப்பிக்க வேண்டும். அத்தோடு பகுதி கிராம சேவையாளருக்கும் தெரியப்படுத்த வேண்டும்.
3. பழுதடைந்த நிலையில் இருக்கும் தையல் இயந்திரங்களை திருத்தம் செய்து தருமாறு பயிற்சியாளர்களினால் வேண்டப்பட்டது அதற்கு அனுமதி வழங்கப்பட்டது.
4. எதிர்வரும் தை மாதம் முதல் வாரத்தில் தையல் கண்காட்சி நடாத்தப்படவேண்டும் அதற்கு அமைவாக உரிய ஒழுங்குகளை மேற்கொள்ளவேண்டுமென்று கூறப்பட்டது அத்தோடு மேற்படி கண்காட்சி நிகழ்விற்கு புதிய நாகரிக உடைகளை தயார்படுத்தவேண்டுமென்றும் கூறப்பட்டது.
5. தையல் பயிற்சி கண்காட்சி, சான்றிதழ் வழங்கும் நிகழ்விற்கு பயிற்சியாளர்கள் தமது செலவில் சீருடை அணிவதற்கு அனுமதி கோரப்பட்டது. இதற்கான அனுமதி பயிற்சியாளர்களுக்கு வழங்கப்பட்டது.
6. பயிற்சி நடைபெறும்போது மண்டபத்திற்குள் சம்பந்தமில்லாதவர்களை உள்வாங்க வேண்டாம். அதன் ஒழுங்குபடுத்தல் தொடர்பாக ஆசிரியருக்கு ஆலோசனை வழங்கப்பட்டது.
7. பாதுகாப்பு காரணங்களுக்காக ஆசிரியர் இல்லாத சந்தர்பங்களில் பயிற்சி நிலையத்தினை இயக்க வேண்டாம்.
8. பயிற்சியில் ஈடுபட்டுள்ள அனைவரும் எமது நிறுவனத்தின் பெயருக்கும், நன்கொடையாளரின் பெயருக்கும் புகழ் சேர்க்கும் வகையில் செயற்பட வேண்டும் எமது கலாச்சாரத்தை பின்பற்றவேண்டும், தேவையில்லா சம்பவங்களை ஏற்படுத்தக்கூடாது ஒவ்வொருதரும் பொறுப்புள்ளவர்களாக செயற்பட வேண்டும்.

9. நன்றியுரை- இப்பயிற்சியினை நடாத்துவதற்கு நிதியுதவி வழங்கிய லோட்டஸ் நிறுவனத்திற்கு எமது மனமார்ந்த நன்றிகளை தெரிவித்துக்கொள்வதோடு, இப்பயிற்சியினை ஒழுங்குபடுத்தி தந்த நாறோ நிறுவனத்திற்கும் நன்றிகளை கூறிக்கொண்டு நிகழ்வில் கலந்து கொண்ட அனைவருக்கு நன்றிகளை தெரிவித்து கூட்டத்தை நிறைவு செய்து கொண்டனர்.

''தங்களின் மேலான ஒத்துழைப்பிற்கு எமது மனமார்ந்த நன்றிகளை தெரிவித்துக்கொள்கின்றோம்.''

நன்றி.
ந.தயானி,
நிர்வாக உத்தியோகத்தர்.